PR. No: 22 09.09.2019

# செய்திக்குறிப்பு

# மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 14.09.2019

திருச்சிராப்பள்ளி மாவட்ட நிர்வாகம், வருவாய்த்துறை, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 14.09.2019, சனிக்கிழமை திருச்சி மாவட்டம், மணப்பாறை வட்டம், 621 307, குறிஞ்சி பொறியியல் கல்லூரி வளாகத்தில், காலை 9.00 மணி முதல் நடைபெறவுள்ளது.

இம்முகாமில் 100-க்கும் மேற்பட்ட முன்னணி தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்குத் தேவையான வேலைநாடுநர்களை தேர்வு செய்யவுள்ளனர். இவ்வேலைவாய்ப்பு முகாமில் 8-ம் வகுப்பு, 10ம் வகுப்பு தேர்ச்சி / தோல்வி, பன்னிரெண்டாம் வகுப்பு, ஐ.டி.ஐ, டிப்ளமோ, பட்டதாரிகள், B.E. வரை படித்த இளைஞர்கள் கலந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 0431 – 2413510, வாட்ஸ்அப் எண்: 9499055902. இதற்கான அனுமதி முற்றிலும் இலவசம். எவ்வித பதிவு கட்டணமும் இல்லை.

நாளது தேதிவரை சென்னையில் உள்ள செயினட்கோபின் பி(லிட்), அப்பல்லோ பார்மஸி, பிரேக்ஸ் இந்தியா, சிம்ப்ஸன் பி(லிட்), இன்னோவேஜ் பி(லிட்) போன்ற 38-க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் இம்முகாமில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

வேலைநாடுநர்களுக்கு மணப்பாறை பேருந்து நிலையத்திலிருந்து முகாம் நடைபெறும் கல்லூரி வரை இலவச பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், இம்முகாமில் சென்னையில் உள்ள அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்(OVERSEAS MANPOWER CORPORATION LTD) மூலம் கீழ்க்கண்ட பணியிடத்திற்கு வேலைநாடுநர்கள் தேர்வு செய்யவுள்ளனர்.

(1) **சவூதி அரேபிய சுகாதார அமைச்சகத்திற்கு** B.Sc **தேர்ச்சியுடன் இரண்டு வருட பணி அனுபவம் மற்றும்** 35 **வயதிற்குட்பட்ட Female Nurses** பணிக்காலியிடத்திற்கு **மாதச்சம்பளம் ரூ 80,000/- முதல் ரூ** 1,00,000/- வரை வழங்கப்படும்.

(2) **இங்கிலாந்து நாட்டில் உள்ள அரசு மருத்துவமனைகளுக்கு (National Health Service, UK) Doctors, Diploma and B.Sc Degree (Male/Female) Nurses போன்ற பணியாளர்களுக்கு பணியமர்த்தும் பொருட்டு** IELTS **-ல் இலவச பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்துள்ளது. செவிலியர்களுக்கு மாதச்சம்பளம் ரூ** 2,00,000/- **ஆகும். வயது வரம்பு** 22 **முதல்** 35 **வரை**.

(3) **ஓமன் நாட்டிலுள்ள ஒரு முன்னணி நிறுவனத்தில் பணிபுரிய** 35 **வயதிற்குட்பட்ட** Electrical I.T.I/Diploma/B.E **படிப்புடன் ஐந்து வருட பணி அனுபவம் பெற்ற** Substation Electrical Technician, Electrical Engineer, Electrical Technician, Cable Jointer OH Lineman. **டிப்ளமோ மெக்கானிக்கல் பிரிவில் தேர்ச்சி பெற்ற ஆப்ரேட்டர்கள் மற்றும்** Casting Finishing Supervisor பணிக்காலியிடத்திற்கு ஆட்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

வேலைநாடுநர்கள் தங்களது முழு சுய விவரக்குறிப்பு நகல்கள், அனைத்து கல்விச்சான்றுகள், ஆதார் அட்டை மற்றும் பாஸ்போர்ட் அளவுள்ள புகைப்படம் ஆகியவற்றுடன் வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு தங்களுக்கு பொருத்தமான பணியினை தாங்களே தேர்வு செய்வதற்கான அரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளும்படி திருச்சி **மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எஸ்.சிவராசு, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
திருச்சிராப்பள்ளி.

துணை இயக்குநர்
மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்
நெறி வழிகாட்டும் மையம்,
திருச்சிராப்பள்ளி